This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

www.writersujatha.com

# நைலான் கயிறு

***சுநந்தாவின் டயரியிலிருந்து...***

*18.09.65*

*எனக்கு இன்று பதினெட்டு வயசாகிறது. எத்தனை மாறியிருக்கிறேன்! போன வருஷம் தைத்த ப்ளவுஸ் எல்லாம் பிடிக்கிறது. உயரமாக வளர்ந்திருக்கிறேன். கண்ணாடிக்கு முன்னாலே விதவிதமா டிரஸ்லேயும் அன்டிரஸ்லேயும் நின்று என்னையே பார்த்துக்கறபோது வெட்கமாகவும் இருக்கிறது. தொடர்ந்து பார்த்துக் கொள்ள ஆசையாகவும் இருக்கிறது. ரேடியோ சிலோன் கேட்டு அலுத்துப் போய்விட்டது. வராந்தாவில் உட்கார்ந்து ஆண்களைப் பார்த்து ஒவ்வொருவருக்கும் 'மார்க்' போட்டுக் கொண்டிருக்கிறேன். எல்லாரையும் 'அவ'ரோடு ஒப்பிட்டுப் பார்க்கிறேன். இந்த ஒரு வாரத்திலே என் உடம்பிலே புதுசா ரத்தம் ஓடுகிறாற்போலத் தெரிகிறது! எதுக்கோ விதவிதமாக அலங்காரம் செய்து கொள்கிறேன்.*

*என் அருமை சுநந்தா! நீ பைத்தியம். எப்படிப்பட்ட பைத்தியம்? எழுதாதே! அந்த வார்த்தையை உபயோகிக்காதே!*

*அவர் கொடுத்த புஸ்தகத்தைப் படிக்க ஆரம்பித்துவிட்டேன்....ரகசியமாக!*

## 1

## நட, ஓடாதே!

இடம் : பம்பாய், மகாத்மா காந்தி ரோடு.
நேரம் : இரவு ஏழு முப்பத்தாறு.

அவன் நடந்தான் சற்றுத்தூரம். தெரு ஓரத்தில் மிதந்து சென்று கொண்டிருந்த டாக்ஸியைத் தடுத்து நிறுத்தி தானே கொடியை மடக்கிக் கதவைத் திறந்து உட்கார்ந்து கதவைச் சாத்தினான். "பெட்டர் ரோட்!"

டாக்ஸி பவாய் வளைந்து ஒன்று, இரண்டு, மூன்றாவது கியருக்கு வந்து, வேகம் பிடித்து, வேகம் குறைந்து, சிவப்பு விளக்கில் தயங்கி, அம்பர் விளக்கில் நழுவி, பச்சை விளக்கில் விரைந்து 'ஜாஸ்' சங்கீதம் போல் பறந்தது.

சத்தியமாக அவன் செய்யப்போவதை எதிர்பார்க்கமாட்டீர்கள். என்ன செய்தான்? சொல்லலாம். ஃப்ளை ஓவரைத் தாவியதும் பெட்டர் ரோடில் டாக்ஸியை வேகம் குறைக்கச் சொன்னான். பதினைந்து மாடி, பத்து மாடி, ஒன்பது மாடிக்கட்டிடங்களைப் பார்த்துக் கொண்டே வந்தவன், ஒரு கட்டிடத்தின் முன் நிற்கச் சொன்னான். இறங்கினான். ஐந்து ரூபாய் கொடுத்தான். சில்லறை வாங்க மறுத்தான். நடந்தான்.